# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2354/08 - 2023 ඔක්තෝබර් මස 17 වැනි අඟහරුවාදා - 2023.10.17

*2354/08 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**மாண்புமிகு சனாதிபதி அவர்களால் செய்யப்படும் கட்டளை**

*1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்*

முத்திரை

**ரணில் விக்கிரமசிங்க**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இவ்வறிவித்தலின் மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் எந்தவொரு அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்க திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றினால் வழங்கப்படும் சேவைகள் வழமையான பொதுமக்கள் வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்கு இன்றியமையாததென மற்றும் சொல்லப்பட்ட சேவைக்கு இடையூறாகக் கூடுமென்பதை அல்லது தடையாகக்கூடுமென்பதைக் கருத்திற்கொண்டு எந்தவொரு அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்க திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளையொன்றின் மூலம் வழங்கப்படும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைகள் மேற்போந்த பிரிவின் பணிகளுக்காக அத்தியாவசிய சேவைகள் என இக்கட்டளையின் மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது.

மாண்புமிகு சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**ஈ. எம். எஸ். பீ. ஏக்கநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.


1A - G 40542 — 361 (2023/10)

*இவ் அதிவிசே ட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*1.* மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகள்.

*2.* பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம்.

*3.* வைத்தியசாலைகள், நேர்சிங் ஹோம்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்தவகையிலான சகல சேவைகள், வேலைகள் அல்லது தொழில் பங்களிப்பு.

EOG 10 - 0178

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.